3rd August 1965]

ஆட்டோ ரிக்ஷாக்கள்

*63 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1964-65-ல் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டன?

(இ) அவைகளுள் புதிதாக லைசென்ஸ் வழங்கப்பட்டவை எத்தனை?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Two hundred and ten as on 1st April 1964.

(*b*) Nil.

புலவர் கா. கோவிந்தன்: கட்டணம் மலிவானது. நெருக்கமாக இருக்கக்கூடிய தெருக்களுக்குக்கூட கொண்டு செல்லக் கூடியது. முன்பு 500 பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருந்தன. இப்போது குறைக்கப்பட்டுள்ளது. முன்பு கொடுத்திருந்த 500 வரையிலாவது கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். திடீரென்று எல்லாவற்றின் லைசென்சுகளையும் ரத்து செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் எந்த எந்த வண்டிகள்—ஏற்கனவே லைசென்சு கொடுக்கப்பட்டவை—பழுதாகப் போய்விடுகின்றனவோ, அவற்றை எடுத்து விடுகிறோம்.

திரு. மு. கருணாநிதி: சென்னை நகரில் மொத்தம் எவ்வளவு ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 210 என்று சொன்னேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களைக் குறைக்கக் காரணம் என்னவென்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது பற்றி ட்ராபிக் செல் பரிசீலனை செய்தது. பொதுவாக, பெரிய நகரங்களில் த்ரீ வீலர் களை எடுத்துவிட வேண்டும் என்பது அவர்கள் யோசனை. பம்பாயில் ஆட்டோ ரிக்ஷாக்களையே எடுத்துவிட்டார்கள். டெல்லியிலும் எடுத்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாமும் இப்பொழுதில் இருந்தே குறைத்துக் கொண்டு வந்தால்தான் பின்னால் இது ஒரு பெரிய பிரச்சினையாக எழாமல் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். ஆட்டோ ரிக்ஷாக்களை ரைட் ஹாண்டு பக்கம் திருப்பும் போது ஆக்ஸிடெண்ட் ஆகிறது. ஸ்டேபிள் ஈக்விலிப்ரியம் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கோவை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் எல்லாம் ஆட்டோ ரிக்ஷா விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஜனநெருக்க

மூள்ள இடங்களில் தடை செய்யப்பட்டாலும் புதிதாக நகரம் விரிவடைந்து வருகிற கோடம்பாக்கம், மேற்கு மாம்பலம் போன்ற இடங்களிலாவது ஓட அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி யோசனை இது வரை வரவில்லை. கனம் அங்கத்தினர்கூட டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் ஓர் உறுப்பினர் என்று நினைக்கிறேன். அடுத்து வருகிற கூட்டத்தில் கனம் அங்கத்தினர் இந்த யோசனையைச் சொன்னால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. எம். எஸ். மணி : படிப்படியாக ஆட்டோ ரிக்ஷாக்களைக் குறைத்து வருவதாகச் சொன்னார்கள். ஆனால் திருச்சியில் படிப் படியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பெரிய நகரங்களில் ஜன நெருக்கடி—டிராபிக் கன்ஜெஷன்—உள்ள இடங்களில் குறைத்து வருவதாகச் சொன்னேன். ஆட்டோ ரிக்ஷாக்களினாலும் ஓரளவு நன்மை இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியும். அதனால் தான் போக்குவரத்து நெருக்கடி இல்லா நகரங்களில்—முன்பாவது ஒரு லிமிட் வைத்திருந்தோம்—இப்போது லிமிட் இல்லாமலே அனுமதித்து வருகிறோம்.

Traffic in Thanjavur

* 64 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study team has been constituted to go into the question of traffic congestion in Thanjavur and the neighbouring areas; and

(*b*) if so, the recommendations, if any, made by the team and the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் அநேகமாக 20 மைல் போகக் கூடிய இடங்களுக்கு நெருக்கடி அதிகமாக இருக்கிறது. நீண்ட நேரம் பஸ்களுக்கு இடமில்லாமல் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. அம்மாதிரி இடங்களில் இன்னும் அதிகம் விட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூலக் கேள்வி தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் டிராபிக் செல் அமைக்கப் பட்டதா என்பது. அந்த மாதிரி இல்லை. டிராபிக் அதிகாரிகள் அந்த அந்த இடங்களுக்குப் போய் டிராபிக் கன்ஜெஷன் நிலைமையை ஆராய்கிறார்கள். டிராபிக் சிக்னல் போடுவது பற்றிப் பரிசீலிக்கிறார்கள். அதன்படி டிராபிக் ரெகுலேஷன் செய்து வருகிறோம்.